**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 78/2014** **நாள்.29.11.2023**

2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 நாள் வாதி தரப்பு 4 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவநேசம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஜோதி | சாதி | |
| கிராமம் | ஈயகுணம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 40 |

**வ.சா.4**

**குறுக்கு விசாரணை**

I. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் உன்னாமந்தல் இ.பி அலுவலகத்தில் கணக்கீட்டாளராக வேலை பார்த்து வருகிறேன். 28.08.2014 ம் தேதியில் நான் இ.பி அலுவலகத்தில் கணக்கீட்டளாராக வேலைக்கு சேர்ந்ததேன். அதற்கு முன்பு விவசாய வேலை பார்த்தேன். நான் ஈயகுணம் கிரமத்தில் வசிக்கிறேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாதி , பிரதிவாதி எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆறுமுகம், துரைராஜ் , சண்முகம் ஆகியோர் உறவினர்கள். நான் மேற்படி நபர்கள் வசிக்கும் தெருவில் வசிக்கவில்லை. வேறு தெருவில் வசிக்கிறேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. சண்முகம் என்பவர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். சண்முகம் இன்று இந்நீதிமன்றத்திற்கு வரவில்லை. நான் வேலை பார்க்கும் அலுவலகம் அரசு துறை என்றால் சரிதான். அரசு ஊழியர்களுக்கான விதிமுறைகள் எனக்கும் பொருந்தும் என்றால் சரிதான். இன்று நான் அலுவலகத்திற்கு விடுமுறை கேட்டு பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க செல்வதாக கூறி விடுமுறை பெற்றுள்ளேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க செல்வதற்கு தான் எனக்கு விடுமுறை கொடுத்துள்ளார்கள். ஆறுமுகம் என்பவர் யாராவது கடன் கேட்டால் கொடுப்பார். ஆறுமுகம் கடன் கொடுத்தவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருவார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. துரைராஜ் என்பவரின் கொடுக்கல் வாங்கல் விவரம் எனக்கு தெரியாது. சண்முகம் என்பவர் கொடுக்கல் வாங்கல் விவரம் எனக்கு தெரியாது.

II. நான் பாண்டு மற்றும் அடமான பத்திரம் எழுதும் வேலை நான் செய்யவில்லை. நான் ஆங்கிலத்தில் தான் எப்பொழுதும் கையெழுத்து போடுவேன். எனக்கு தமிழில் நன்றாக எழுத, படிக்க தெரியும். பாண்டு எழுதியது சம்பந்தமாக என்னை சண்முகம் சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டார். நான் வேலைக்கு சென்றததில் இருந்து யாருக்கு பாண்டு எழுதியது இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தான் பூர்த்தி செய்தேன். வா.சா.1 ஆவணத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விவரம் ஒரு பேனா மையினாலும், அதில் உள்ள கையெழுத்துக்கள் வேறு பேனா மையினாலும் எழுதப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் குடும்ப விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதிகளின் குடும்ப விஷேசங்களுக்கு நான் செல்லவில்லை. பிரதிவாதிகள் எனக்கு முன் பின் தெரியாதவர்கள் என்றால் சரிதான். நான் ஏழுமலை என்பவர் சொல்லி தாவா பாண்டை எழுதினேன். எனக்கு ஏழுமலை பற்றியும் அவரது குடும்பத்தை பற்றியும் தெரியாது என்றாலும் சண்மும் சொன்னதன் பேரில் தாவா பாண்டை எழுதியதாக சாட்சியம் அளி்கிறேன் என்றால் சரியல்ல. ஏழுமலையை நான் கடைசியாக 2013 ல் மேல்மலையனூரில் வைத்து பார்த்தேன். ஏழுமலையின் மனைவி மற்றும் பிள்ளைகள் பற்றி விவரம் எனக்கு தெரியாது. ஏழுமலை மீன், கருவாடு விற்கும் வகையில் எனக்கு பழக்கம் அதனால் அவர் தாவா பாண்டு எழுத சொன்னதன் பேரில்பாண்டை எழுதினேன். தெருவில் பொருள் விற்பவர்கள் சொன்னால் பாண்டு எழுதிவேனா என்றால் தெரிந்தவர் என்பதால் எழுதினேன். ஆறுமுகம் என்பவர் வெற்றுபாண்டை என்னிடம் கொடுத்து பூர்த்தி செய்யுமாறு சொன்னதால் நான் பாண்டு எழுதினேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டு எழுதும போது ஆறுமுகம், துரைராஜ், ஏழுமலை, சண்முகம் ஆகியோர் வந்தார்கள். ஏழுமலை வீடு எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாத நபர் பாண்டை எழுத சொன்னதால் பாண்டு எழுதியதாக சொல்லுவது ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தனிப்பட்ட ஆதாயத்திற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.